Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 153/2022** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW24** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | சுந்தரேஸ்வரன் |
| Father Name | : | ராமர் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கேணிக்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கேணிக்கரைகாவல்நிலைய குற்ற எண்.150/2021 சட்ட பிரிவுகள் 294(பி), 323, 302, 109 இதச வழக்கினை புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் மலைச்சாமி இறந்துவிட்டதால் தற்போதைய நிலைய அதிகாரி என்ற அடிப்படையில் வழக்கு கோப்பினை பார்வையிட்டு அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன காவல் ஆய்வாளர் மலைச்சாமி கடந்த 08.03.2021ம் தேதி தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தலைமறைவாக இருந்த எதிரி நவநீதகிருஷ்ணன் என்ற கஜேந்திரன் என்பவரை அன்றைய தினமே காலை 11.15 மணிக்கே பட்டினம்காத்தான் ஈசிஆர் சந்திப்பில் உள்ள ராம்நகர் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து கிராம நிர்வாக அலுவலர் செல்வம் மற்றும் கிராம

உதவியாளர் ஜெகதீசன் ஆகியோர்களை தகவல் சொல்லி வரவழைத்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றுள்ளார். எதிரி நவநீதகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து இறந்துபோன பனையடியானை வெட்டப்பயன்படுத்திய அருவாளை மறைத்து வைத்திருக்கும் இடத்திலிருந்து அடையாளம் காட்டி எடுத்து தங்களிடம் ஆஜர்செய்கிறேன் என கூறியதன் அடிப்படையில் எதிரி நவநீதகிருஷ்ணன் ஆர்எஸ் மடை EB ஆபிஸ் அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த அருவாளை பகல் 01.00 மணி முதல் 01.30 மணிவரை எடுத்து ஆஜர்செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றியிருக்கிறார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி அருவாளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அன்றைய தினமே அனுப்பி வைத்திருக்கிறார். மேலும் ஏற்கனவே இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டிருந்த பொருட்களை இரசயான பரிசோதனை செய்வதற்கு நீதிமன்றத்திற்கு 14.04.2021ம் தேதி வேண்டுகோள் கொடுத்து அதன் அடிப்படையில் தலைமை காவலர் இளங்கோ மூலமாக இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு பின்னர் அறிக்கை பெற்றிருக்கிறார். இறந்த பனையடியான் மற்றும் காயம்பட்ட ராஜேஸ்வரனுக்கு விபத்து பதிவேடு செய்த மருத்துவர் முத்தமிழரசி அவர்களை 20.03.2021அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் இறந்த பனையடியான் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அருள்மோகன் என்பவரை 03.05.2021 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கின் புகார்தாரரான ரவி மற்றும் காயம்பட்ட ராஜேஷ் ஆகியோர்களை 19.07.2021 அன்று மறுவிசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 323, 302 இதசவிலிருந்து 294(பி), 323, 302 மற்றும் உடன் இணைந்த பிரிவு 109ன் கீழ் இதசவின் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் இறுதி அறிக்கை **அ.சா.ஆ.21**. இவ்வழக்கின் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக கடந்த 19.07.2021 அன்று 294(பி), 323, 302 மற்றும் உடன் இணைந்த பிரிவு 109ன் கீழ் இதசவின் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன பனையடியானின் இறப்பு சான்றிதழ் மற்றும் விஸ்ரா அறிக்கையில் மற்றும் இறுதி அறிக்கையிலும் இறக்கும்போது மதுவின் ஆளுகையில்

இருந்திருக்கிறார் என்று தெரியவருகிறது என்று சொன்னால் சரிதான். அதில் குறிப்பாக வயிற்றுப்பகுதியில் 276 மிலிகிராம் எத்தில் ஆல்கஹால் இருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோனவர் எங்கு வைத்து மதுவின் ஆளுகைக்கு உட்பட்டார் என்பது சம்மந்தமாக எந்த புலன்விசாரணையும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு அறிக்கையில் இறந்துபோனவர் எங்கு வைத்து காயம்பட்டார் என்பதோ, யாரால் எந்த ஆயதத்தால் காயம்பட்டு இறந்தார் என்ற விவரத்தை சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். முருகன் கோவில் ஆட்டோ ஸ்டாண்ட் என்பதும், பேருந்து நிறுத்த ஆட்டோ ஸ்டாண்ட் என்பதும் வேறுவேறு பகுதிகள் என்றால் சரிதான். பனையடியான் எவ்வாறு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டார் என்பது சம்மந்தமாக எந்த புலன் விசாரணையும் செய்யப்படவில்லை என்றால், ஆட்டோவில் ஏற்றப்பட்டிருக்கிறார். ஆட்டோ யாருடையது, அதன் ஓட்டுநர்யார் என்பது சம்மந்தமாக எந்த புலன்விசாரணையும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். முருகன் கோவில் ஆட்டோ ஸ்டாண்டில் இருக்கக்கூடிய நபர்கள் யாரையும் விசாரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். முருகன் கோவில் இருககக்கூடிய பகுதிகள் அனைத்தும் மிகுந்த ஜனநெருக்கக்கூடிய இடம் என்றாலும், அடுத்தடுத்து கடைகள் இருக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான், 2021ல் எவ்வாறு இருந்தது என்பது தெரியாது. இந்த வழக்கில் அடையாள அணிவகுப்பு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்றவாளி யார் என்று தெரியாத நிலையில் ஒருநபர்தான் ஈடுபட்டிருக்கிறார் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்பதற்காக ராஜேஷ் என்பவர் காயம்பட்டதாகவும், ரவி என்பவரை கண்ணுற்ற சாட்சியாக இருக்க வைக்க வேண்டும் என்பதற்காக அவர்களை பின்னிட்டு இந்த வழக்கில் விசாரணை செய்ததாகவும், அதற்கேற்ப வாக்குமூலங்களையும், ஆவணங்களையும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. ரவி மற்றும் ராஜேஷ் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராம்நகர் பஸ்ஸ்டாப் என்பது மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதி என்றும், அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து 2ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவர் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்தவிதமான

பொருளையும் அவர் எடுத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தது கணினியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, அது எங்கு வைத்து, யாரால் பதிவு செய்யப்பட்டது என்பதும், யாரால் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது சம்மந்தமாக எந்த விசாரணையும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன விசயங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றாலும், இறந்த பனையடியான் மீது பல கொலை வழக்குகள் இருக்கிறது என்றும், அதனால் அவருக்கு விரோதிகள் அதிகமாக இருந்தார்கள் என்றும், அவர் எங்கோ மது அருந்திவிட்டு தகராறு செய்து காயம்பட்டார் என்றும், பின்னிட்டு அவைகள் அனைத்தும் மறைக்கப்பட்டுவிட்டு ஏற்கனவே எதிரிகள் மீது புகார்தாரர் கொண்டிருந்த காற்புணர்ச்சியை வைத்து பின்னிட்டு எதிரிகள் மீது இந்த வழக்கு புனையப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ஆய்வாளர் சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் காவல் ஆய்வாளர் மலைச்சாமி எந்தவிதமான விசாரணையும் செய்யவில்லை என்றும், ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.